# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.வி.மு.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8120353

1. District : மாவட்டம் திருச்சிராப்பள்ளி  PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year: ஆண்டு 2025  FIR No.: மு.த.அ. எண் 03  Date: நாள் 17/2/2025

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம்.1988 (2018-ல் திருத்தப்பட்டது)  Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 13/2/2025  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 10.45 hrs  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17/2/2025  Time நேரம் : 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 km தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி -
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.R. சீனிவாசன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராமசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 5/1/1974  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் -  Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் Business  (g) Address : முகவரி பிளாட் நம்பர்-26, இந்திராகாந்தி தெரு, K.K. நகர், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. சந்திரசேகரன், உதவி செயற் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கே கே நகர், திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை .............. No. எண் ..........

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2025–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 17.02.2025ஆம் தேதி பணியில் இருந்தபோது காலை 07.00 மணியளவில் திருச்சி, கே.கே.நகர், பிளாட் எண்.26, இந்திராகாந்தி தெருவில் வசித்து வரும் ராமசாமி மகன் திரு.சீனிவாசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, கே.கே.நகரில் உள்ள மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலக செயற்பொறியாளர் திரு.சந்திரசேகர் மற்றும் புகார்தாரர் திரு.சீனிவாசன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இன்று 17.02.2025ஆம் தேதி காலை 07.45 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.03/2025, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் K.R.சீனிவாசன், வயது 50, த/பெ.ராமசாமி, பிளாட் எண்.26, இந்திராகாந்தி தெரு, கே.கே.நகர், திருச்சி–21, பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம், திருச்சி. ஐயா, நான் திருச்சி, கே.கே.நகர், இந்திரா காந்தி தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் KRS அர்ஜூன் குரூப் குழுமத்தின் தலைவராக உள்ளேன். எனது மனைவி அறிவுசெல்வியின் பெயரில் திருச்சி, கொட்டப்பட்டு, முல்லை நகரில் S.NO.166/1B1–ல் சுமார் 15715 சதுரடி இடம் உள்ளது. அதன் T.S.No.34, Ward-AV, Block-4 ஆகும். மேற்படி இடத்தில் Badminton court கட்டுவதற்கு மும்முனை மின் இணைப்பு பெறவேண்டி கடந்த 04/01/25 அன்று கே.கே.நகர் மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு எனது மனைவி திருமதி.அறிவுச்செல்வி பெயரில் ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். பின்னர் 06/01/25 அன்று மும்முனை மின் இணைப்பு பெறுவதற்கு மின் இணைப்பு கட்டணமாக ரூ.13,300/–ஐ ஆன்லைன் மூலம் செலுத்தினேன். நான் மின் இணைப்பு பெறுவதற்கு கட்டணம் செலுத்தி 1 மாதம் காலம் ஆகியும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. அதனால் 13/02/25 அன்று காலை சுமார் 10.45 மணியளவில் திருச்சி, கே.கே.நகரில் உள்ள மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவகத்திற்கு சென்று அங்கு உதவி செயற்பொறியாளர் திரு.சந்திரசேகர் என்பவரை சந்தித்து, எங்களுடைய மின் இணைப்பு பெறுவது தொடர்பாக பணம் கட்டிய விபரம் சொன்னேன். அதற்கு உதவி செயற்பொறியாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் உங்களுக்கு மின் மீட்டர் சேஞ்சன் ஆகிடுச்சி, மின் இணைப்பு கொடுக்க வேண்டியதுதான் பாக்கி சொல்லி கொண்டே, எனக்கு தனியாக 10,000 ரூபாய் கொடுத்திடுங்க மீட்டரை பொருத்தி மின் இணைப்பு கொடுத்திடலாம் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சார், ஏற்கனவே கவர்மெண்ட் பீஸ் ஆன்லைனில் கட்டிவிட்டேனே. என்ன சார்

இதுவும் கவர்மென்ட் பீசா என்று கேட்டேன். அதற்கு உதவி செயற்பொறியாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் நீங்க ஒரு குழுமத்தின் தலைவரா இருக்கீங்க, உங்களுக்கு இந்த பார்மாலிடி எல்லாம் தெரியாத மாதிரி கேக்காதீங்க, வழக்கமா எல்லாரும் கொடுக்குறதுதான், நீங்க போய்ட்டு நாளைக்கு பணத்தோட வாங்க என்று சொன்னார். நாளைக்கு Badminton court சம்மந்தமாக சாமான்கள் வாங்க வேண்டியிருக்கு சார் நாளை மறுநாள் வரவா என்று கேட்டேன். அதற்கு அவர் வேண்டாம் நீங்க திங்ககிழமை பணத்தோட வாங்க என்று சொன்னார். உங்களுக்கு உடனே மின் இணைப்பு கொடுத்திடலாம் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரிங்க சார், பணத்தை ரெடி பண்ணிகிட்டு வந்திடுறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் எனது மனைவி அறிவு செல்வியிடம் விஷயத்தை சொன்னேன். அவர் பணம் கேட்ட மின் அலுவலர் மீது நடவடிக்கை எடுங்க என்ற சொன்னார். எனவே என்னிடம் மும்முனை மின் இணைப்பிற்கு லஞ்சம் கேட்ட கே.கே.நகர் உதவி செயற்பொறியாளர் திரு.சந்திரசேகர் மீது நடவடிக்கை எடுக்க ஒரு புகார் மனுவை தயார் செய்து எடுத்துக்கொண்டு, அத்துடன் திருச்சி, கே.கே.நகர், தமிழ்நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.சந்திரசேகர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/-ஐ தயார் செய்து கொண்டு, இன்று 17/02/25 காலை சுமார் 07.00 மணிக்கு திருச்சி லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம் வந்து, காவல் ஆய்வாளராகிய தங்களிடம் எனது புகார் மனுவை கொடுத்தேன். இப்படிக்கு. Sd.xxx 17/2/25 Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the Trial Cases under Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 07.00 hrs., on 17/02/2025 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.03/2025, u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 07.45 hrs., on 17/2/2025. Sd.xxx (A.Prasanna Venkatesh) 17/2/2025 Inspector of Police, V&AC, Trichy.

17/2/2025
Inspr V&AC Trichy.